தினமணி

# கடலூர் டெல்டாவில் சம்பா நடவுப் பணி தாமதம்

First Published : 09 Oct 2010 12:00:00 AM IST



சிதம்பரம் வட்டம் கீழ் அணுவம்பட்டு கிராமத்தில் நாற்றங்கால் தயாரிக்க விதை நெல் தூவும் விவசாயிகள்.

கடலூர், அக். 8: கடலூர் மாவட்ட டெல்டா பாசனப் பகுதிகளில் சம்பா நடவுப் பணி தாமதமாக நடந்து வருகிறது.

÷கடலூர் மாவட்டத்தில் 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 1.45 லட்சம் ஏக்கர் காவிரி டெல்டா பாசனப் பகுதிகள். கடலூர் மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை சிறப்பாக அமைந்ததால், டெல்டா அல்லாத பகுதிகளில் சம்பா சாகுபடிப் பணிகளை விவசாயிகள் முன்னரே தொடங்கி விட்டனர். டெல்டா பகுதிகளில் காவிரி நீர் தாமதமாகத் திறக்கப்பட்டதால், சாகுபடிப் பணிகள் தாமதமாகத் தொடங்கி உள்ளன.

÷ஜூன் மாதம் 12-ம் தேதி திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை, இந்த ஆண்டு ஜூலை 28-ம் தேதி திறக்கப்பட்டது. கடலூர் மாவட்டப் பாசனத்துக்காக கொள்ளிடம் கீழணை ஆகஸ்ட் 7ம் தேதியும், கடைமடைப் பகுதிகளுக்கு வீராணம் ஏரி, செப்டம்பர் 11ம் தேதியும் திறக்கப்பட்டது.

÷கடலூர் மாவட்டத்தில் 2.5 லட்சம் ஏக்கர் சம்பா பரப்பளவில் இதுவரை, 90 ஆயிரம் ஏக்கரில் நடவு முடிந்து இருப்பதாக வேளாண் அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். ஆனால், டெல்டா பாசனப் பகுதிகளில் சுமார் 35 ஆயிரம் ஏக்கரில் (வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால் பாசனப் பகுதிகள்) மட்டுமே நடவுப் பணிகள் முடிந்துள்ளன. சுமார் 1 லட்சம் ஏக்கரில் (வீராணம் ஏரி, சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனப் பகுதிகள்) தற்போதுதான் நாற்றங்கால் பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன. கடைமடைப் பகுதிகளான இவற்றில் நடவுப் பணிகள் இம்மாதக் கடைசியில்தான் தொடங்கும் என்கிறார்கள் விவசாயிகள்.

÷காவிரி நேரடி பாசனப் பகுதிகளான தஞ்சை, திருவாரூர், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் நடவுப் பணிகள், 60 சதவீதம் முடிவடைந்து விட்டதாக விவசாயிகள்

கூறுகின்றனர். இந்த 4 மாவட்டங்கள் மற்றும் நாகை, காவிரி பாசனப் பகுதிகள் பொதுப் பணித்துறை திருச்சி மண்டலத்திலும், கடலூர் மாவட்டம் சென்னை மண்டலத்திலும் உள்ளன.

÷மேட்டூர் அணையை தாமதமாகத் திறந்ததும், கடலூர், நாகை டெல்டா பாசனப் பகுதிகளுக்கு மேலும் தாமதமாகத் தண்ணீர் வழங்கியதுமே, நடவுப் பணிகள் தாமதத்துக்குக் காரணம் என்கிறார்கள் விவசாயிகள். தஞ்சை, திருவாரூர், நாகை, கடலூர் மாவட்டங்கள் வடகிழக்குப் பருவ மழையால் பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகள். எனவே அக்டோபர் இறுதிக்குள் நடவுப் பணிகளை முடித்துவிட்டால், வடகிழக்குப் பருவ மழையின் தாக்கத்தில் இருந்து, இளம் பயிர்கள் தப்பிவிடும் என்பது விவசாயிகளின் கருத்து.

÷ பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், கடலூர், நாகை மாவட்டங்களில் நடவுப்பணி 30 சதவீதம் முடிவடைந்து உள்ளது. கடைமடைப் பகுதிகளுக்கு கடந்த ஒரு வாரமாகத்தான் தண்ணீர் கிடைத்தது. கீழணையில் 7.5 அடியும் (மொத்த உயரம் 9 அடி) வீராணத்தில் 44.5 அடியும் (மொத்தக் கொள்ளளவு உயரம் 47.5 அடியாக இருப்பினும், வடகிழக்குப் பருவமழை காலத்தில் பாதுகாப்பு கருதி, 43 அடிக்கு மேல் தேக்கக் கூடாது என்பது விதி) உள்ளன. பெருமாள், வாலாஜா ஏரிகள் 90 சதவீதம் நிரம்பி விட்டன.

÷முந்தை ஆண்டுகளில் மேட்டூர் அணை நீர்மட்டம் 60 அடி, 70 அடியாக இருந்த காலங்களிலும் உரிய நேரத்தில் திறக்கப்பட்டு உள்ளது. மேட்டூர் அணையிலும் கடலூர் மாவட்ட நீர்நிலைகளிலும் இவ்வாறு தண்ணீரைத் தேக்கி வைப்பது மிகவும் ஆபத்தானது. திடீரென பெரம்பலூர் மாவட்டத்தில் மழை பெய்தாலும், கர்நாடகத்தில் நீர் திறந்து விட்டாலும், வீராணம் ஏரியில் இருந்து 20 ஆயிரம் கன அடிக்குமேல் வெளியேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, கடைமடைப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும். எனவே நடவுப் பணிகளை துரிதப்படுத்த கூடுதல் நீர் திறக்க வேண்டும் என்றார்.

÷காவிரி டெல்டா விவசாய விளைபொருள் உற்பத்தியாளர்கள் சங்கத் துணைத் தலைவர் காட்டுமன்னார்கோயில் கண்ணன் கூறியது: மேட்டூர் அணையை முன்னரே திறந்து இருக்க வேண்டும். 2005-ல் மேட்டூர் அணையை உரிய நேரத்தில் திறக்காமல், 120 அடி வரை தேக்கி வைத்ததால், கர்நாடகத்தில் திறந்துவிட்ட 3 லட்சம் கன அடி நீர், கொள்ளிடம் வழியாக, வீணாகக் கடலில் கலந்தது. கடலூர் மாவட்டம் மிகப்பெரிய வெள்ளச் சேதத்தை சந்தித்தது. 80 சதவீத பயிர்கள் நாசம் ஆகின. பாசனத்துக்குத் தண்ணீர் திறப்பதில் பொதுப் பணித்துறை அதிகாரிகளுக்கு சரியான புரிதலும், உண்மையான ஈடுபாடும் இல்லை. நடவுப் பணிகளை துரிதப்படுத்த மேட்டூர் அணையில் இருந்து 20 ஆயிரம் கனஅடி நீரை, உடனே திறக்க வேண்டும் என்றார்.

சிதம்பரம் வட்டம் கீழ் அணுவம்பட்டு கிராமத்தில்
நாற்றங்கால் தயாரிக்க விதை நெல் தூவும் விவசாயிகள்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்**

First Published : 09 Oct 2010 09:58:38 AM IST

சேலம், அக். 8: மேட்டூர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 78.92 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 10,203 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 12,749 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 40.88 டி.எம்.சி.

திறக்கப்படாத வேளாண் உரக்கிடங்குகள்!

திருப்பூர், அக்.8: போதிய ஊழியர்கள் நியமிக்கப்படாததால் வேளாண்மை கூட்டுறவு உரக்கிடங்குகள் சரிவர திறப்பதில்லை. இதனால், உரங்கள் பெறுவதில் சிக்கல் நிலவுவதாக விவசாயிகள் குற்றம்சாட்டினர்.

மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், ஆட்சியர் சி.சமயமூர்த்தி தலைமையில் திருப்பூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.கஜலட்சுமி, வேளாண்மை இணை இயக்குநர் ராமமூர்த்தி முன்னிலை வகித்தனர். கூட்டத்தில், விவசாயிகள் பல்வேறு குறைகளை தெரிவித்தனர்.

"திருப்பூர் மாவட்டம், கேத்தனூரில் தேசியமயமாக்கப்பட்ட ஒரு வங்கி கிளையில் கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக விவசாயக்கடன் வழங்குவதில்லை. இதனால் அந்த வங்கியில் கணக்கு வைத்துள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். விவசாய க்கடன் வழங்க விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தாராபுரம் தாலுகா சின்னக்காம்பாளையத்திலுள்ள வேளாண்மை கூட்டுறவு வங்கி உரக் கிடங்கு சரிவர திறப்பதில்லை. இதனால், உரங்கள் கிடைப்பதில் சிக்கல் நிலவுகிறது. இதேபோல், குளத்துப்பாளையம் பகுதியிலுள்ள உரக்கிடங்கில் ஒருவர் மட்டுமே பணியாற்றுவதால், பணிப்பளு காரணமாக உரங்கள் சரிவர விநியோகம் செய்யப் படுவதில்லை. விவசாயிகளின் தேவையைக் கருதி கூட்டுறவு உரக்கிடங்குகளில் போதுமான ஊழியர்களை நியமனம் செய்து தடையின்றி உரங்கள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

15வேலம்பாளையம் நகராட்சியிலுள்ள கால்நடை மருந்தகத்துக்கு வாரம் ஒருமுறை மட்டுமே மருத்துவர்கள் வருகின்றனர். தினமும் மருத்துவர்கள் வர நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். தாராபுரம் அலங்கியத்திலுள்ள கால்நடை மருந்தகத்துக்கு அப்பகுதி கவுன்சிலரின் சொந்த நிதி | 2 லட்சத்தில் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டது. ஆனால் அந்த நிதியால் முழுமையாக பணிகள் செய்ய முடியவில்லை. மாவட்ட நிர்வாகம் போதுமான நிதி ஒதுக்கி அந்த சுற்றுச்சுவரை முழுமைப்படுத்த வேண்டும்.

தாராபுரத்திலுள்ள வருவாய்த்துறை நில அளவையர்கள், விவசாயிகளின் நிலங்களை அளக்க உடனுக்குடன் வருவதில்லை. ஆனால், ரியல் எஸ்டேட் அதிபர்களின் நிலங்களை அளக்க உடனடியாக செல்கின்றனர். விவசாயிகளின் கோரிக்கைக்கு முன்னுரிமை அளித்து நில அளவை

செய்ய அளவையர்கள் விரைவாக வருவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் எடுக்க வேண்டும்.

வீரபாண்டி ஊராட்சி வஞ்சிபாளையம் பகுதியில் கிணறு மற்றும் பிஏபி கால்வாயிலிருந்து சாய ஆலைகளுக்காக தண்ணீர் உறிஞ்சப்படுவதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அதேபோல், செங்கப்பள்ளி பகுதியிலும் நிலத்தடிநீர் பெருமளவில் உறிஞ்சப்படுவதால் அப்பகுதியில் கடுமையான தண்ணீர் பற்றாக்குறை உள்ளது. தடையை மீறி சாய ஆலைகளுக்கு விற்பனைக்காக நிலத்தடி நீரை உறிஞ்சும் லாரி உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

கோரிக்கையை ஏற்ற ஆட்சியர், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மீது இப்பிரச்னைகளுக்கு விரைவான தீர்வு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**லாலாப்பேட்டை வெற்றிலை விவசாயிகளின் குறைகள் களையப்படுமா?**

*சி. பிரகாசம்*

First Published : 08 Oct 2010 11:49:18 AM IST

குளித்தலை, அக். 7: லாலாப்பேட்டை பகுதி வெற்றிலை விவசாயிகளின் குறைகளைப் போக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள்.

கரூர் மாவட்டம், குளித்தலையில் இருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ளது லாலாபேட்டை. இங்கு வெற்றிலை, வாழை போன்றவை பெருமளவு விளைகின்றன. இதுபோல, பிள்ளாப்பாளையம், சிந்தலவாடி, கள்ளப்பள்ளி, கருப்பத்தூர், திம்மாச்சிபுரம், மகிளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் விளையும் வெற்றிலைகளும் தினசரி லாலாப்பேட்டைக்கே கொண்டுவரப்பட்டு, பல்வேறு ஊர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இந்தப் பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் வெற்றிலை சாகுபடியாகிறது. விவசாயிகள் குத்தகை முறையில் சாகுபடியில் ஈடுபடுகின்றனர். இப் பகுதியில் வெள்ளக்கொடி, பச்சக்கொடி, கற்பூர வெற்றிலை உள்ளிட்ட ரகங்கள் சாகுபடியாகின்றன.

ஆடி மாதத்தில் அகத்திக்கீரை விதைகள் நடப்பட்டு, செடி நன்கு வளர்ந்த பின் சில மாதங்கள் கழித்து, வெற்றிலை பதியம் போடப்படுகிறது. பதியம் போடப்பட்டு 10-12 மாதங்களுக்குப் பிறகே வெற்றிலையில் அதிக விளைச்சல் இருக்கும்.

அந்த நேரங்களில் சுருட்டை, வங்கு, கரந்தா, கரையான்வெட்டு, செவட்டை உள்ளிட்ட நோய்களால் வெற்றிலை பாதிக்கப்படுகிறது. மேலும், மழைக் காலங்களில் வேரழுகல் நோய்த் தாக்குதலும் இருக்கும். இத்தகைய பிரச்னைகளிலிருந்து தப்பினால், வெற்றிலைக்கு நல்ல விளைச்சல் கிடைக்கும்.

தை மாதம் சீசன் என்பதால், வெற்றிலை அதிக வரத்து இருக்கும். அண்மையில் கரூர் மாவட்டப் பகுதிகளில் பெய்த மழையால், வேரழுகல் நோயால் சில இடங்களில் பாதிப்பு ஏற்பட்டாலும், அதிக விளைச்சல் காரணமாக தற்போது வெற்றிலை விலை குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள், வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து வெற்றிலைத் தொழிலாளர்கள் ஏ. சண்முகம். எஸ். சக்திவேல் ஆகியோர் கூறியது:

லாலாபேட்டை சுற்றுவட்டாரக் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் இத் தொழிலில் ஈடுபடுகின்றனர். வெற்றிலை ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டால் பூச்சிகளால் 25 ஏக்கரில் பாதிப்பு ஏற்படுகிறது. இவ்வாறு நஷ்டம் ஏற்படும் காலங்களில், அரசு எந்த உதவியும் செய்வதில்லை.

வெற்றிலை அழுகும் பயிர் என்பதால் வங்கிகள் கடன் கொடுக்க மறுக்கின்றன. சிறுகமணியில் வெற்றிலை ஆராய்ச்சி மையமும், கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையும் உள்ள போதிலும் லாலாபேட்டை பகுதி வெற்றிலை விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்குவதில்லை. வெள்ளக் காலங்களில் மட்டுமே அதிகாரிகள் வருகின்றனர். மேலும், வெற்றிலைப் பயிர்களைக் காப்பீடு செய்து கொள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

லாலாபேட்டையில் வெற்றிலை கமிஷன் மண்டி வைத்திருக்கும் பி. மாணிக்கம் கூறியது:

விவசாயிகளிடமிருந்து வாங்கப்படும் வெற்றிலைகள் முட்டிகளாகப் பிரிக்கப்பட்டு, பல பகுதிகளில் உள்ள மண்டிகளுக்கு அனுப்பப்படும். அங்கு விலை நிர்ணயிக்கப்படும். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு 104 கவுளிகள் கொண்ட ஒரு சுமை ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரை விற்றது. ஆனால், அதிக விளைச்சல் காரணமாக, தற்போது ரூ. 400 முதல் ரூ. 700 வரையே விற்கிறது. இதனால், பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெற்றிலை விற்பனை விலையைவிட தொழிலாளர்களுக்கான கூலி அதிகமாகியுள்ளது.

லாலாபேட்டையில் உள்ள மண்டிகளில் மட்டும் சுமார் 150-க்கும் மேற்பட்டோர் வேலை செய்கின்றனர். ஆனால், இங்கு போதிய இடவசதி இல்லாததால், பெரும்பாலும் திறந்தவெளிகளிலேயே அவர்கள் வேலை செய்கின்றனர். மழைக்காலம் வந்துவிட்டால் சிரமம்தான்.

எனவே, இந்தப் பகுதியில் விற்பனைக்கூடம் அமைக்க வேண்டும் எனப் பலமுறை அரசுக்குக் கோரிக்கை விடுத்தும், எங்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

லாலாபேட்டை ரயில்வே கேட் அருகேயுள்ள கோயில் இடத்திலோ அல்லது மேம்பாலத்தின் கீழ் பகுதியிலோ விற்பனைக்கூடம் அமைக்க மாவட்ட நிர்வாகமும், தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

**பப்பாளி மாவுப் பூச்சியைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள்: தமிழ்நாடு வேளாண்மை பல்கலையில் அறிமுகம்**

First Published : 08 Oct 2010 10:51:56 AM IST

கோவை, அக். 7: பயிர்களைத் தாக்கும் பப்பாளி மாவுப்பூச்சியை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் 3 ஒட்டுண்ணிகளை தமிழக வேளாண் அமைச்சர் வீரபாண்டி சோ. ஆறுமுகம் கோவையில் வியாழக்கிழமை அறிமுகம் செய்தார்.

பயிர்களைத் தாக்கும் பப்பாளி மாவுப்பூச்சியை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகளை வயலில் அறிமுகம் செய்து இதற்கான ஆய்வு திட்டத்தை துவக்கும் விழா, கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை நடந்தது. இதில் 3 ஒட்டுண்ணிகளை பல்கலைக்கழக வயலில் தமிழக வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி சோ. ஆறுமுகம் வெளியிட்டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியது:

நமது நாட்டில் பூச்சி மற்றும் நோய்களால் ஏற்படும் உணவு தானிய இழப்பு ரூ. 50 ஆயிரம் கோடியாக கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டின் உணவு உற்பத்தியான 234 மில்லியன் டன்னில் பூச்சி நோய் மற்றும் அறுவடைப் பின் நேர்த்தி ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு சுமார் 10 முதல் 30 சதவீதமாக உள்ளது.

தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியில் பூச்சி நோய்த் தாக்குதலால் ஏற்படும் இழப்பு 20 சதவீதமாக உள்ளது. இது உணவு உற்பத்தியில் 5ல் ஒரு பங்கு. அதேசமயம், பயிரைப் பாதுகாக்க ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை உபயோகிக்கும் நிலையில், மருந்தின் நச்சுத்தன்மை பயிர்களைத் தாக்கி மனித குலத்திற்கு பல பின்விளைவுகளை ஏற்படுத்துகிறது.

பப்பாளி மாவுப்பூச்சி கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்தில் பப்பாளி, மல்பெரி, மரவள்ளி, காட்டாமணக்கு, பருத்தி மற்றும் காய்கறிச் செடிகளை தாக்கி வருகிறது. தொடரும் வெப்பமான சூழல், குறைந்த மழையளவு காரணமாக மாவுப்பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு (2009 -10 ) கோவை, திருப்பூர், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் மாவுப் பூச்சியானது 7,027 ஏக்கர் மரவள்ளியைப் பாதித்தது. இதனைக் கட்டுப்படுத்த ரூ. 1 கோடி மதிப்பிலான பூச்சிக்கொல்லிகள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்த ஆண்டும் (2010-11) நாமக்கல், திருச்சி, கரூர் மாவட்டங்களில் 4,150 ஏக்கர் மரவள்ளியை மாவுப் பூச்சி தாக்கியது. பூச்சித் தாக்குதலை முறியடிக்க தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ. 75 லட்சம் மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்து இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

56 வகை பயிர்களைத் தாக்கும் பப்பாளி மாவுப்பூச்சியை உயிரியல் முறையில் நிரந்தரமாகக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் 3 ஒட்டுண்ணிகளை அறிமுகம்

செய்துள்ளது. அசிரோபேகஸ் பப்பாயி, சுடோப்போடோமாஸ்டிக் மெக்சிகானா, அனகைரஸ் லோக்கி ஆகியவை அந்த ஒட்டுண்ணிகள்.

இவை, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து, பெங்களூரில் உள்ள இந்திய தேசிய வேளாண் உயிரியல் ஆய்வு மையத்தால் இனப்பெருக்கம் செய்யப்பட்டவை. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அந்த ஒட்டுண்ணிகளைப் பெற்று இனப்பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க உள்ளது.

குளவி இனத்தை சேர்ந்த 100 ஒட்டுண்ணிகள் மூலம் 3 மாதங்களில் 5 லட்சம் ஒட்டுண்ணிகளை இனப்பெருக்கம் செய்யலாம். இதற்கென பல்கலைக்கழகத்தில் ரூ. 60 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வட்டாரந்தோறும் உள்ள வேளாண் அறிவியல் மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு இவை வழங்கப்படும். வேளாண் அலுவலர்கள் இதனைக் கண்காணிப்பார்கள். இந்த ஒட்டுண்ணிகள் தானாகவே பரவும் என்பதால், ஒரு கிராமத்திற்கு 100 ஒட்டுண்ணிகள் போதுமானது.

இந்த ஒட்டுண்ணிகள் மூலமாக தமிழகத்தில் மாவுப்பூச்சி விரைவில் முழுமையாக கட்டுப்படுத்தப்படும். இலங்கையில் இந்த ஒட்டுண்ணிகள் வெற்றிகரமாக செயலாற்றி உள்ளன என்றார்.

தமிழக அரசின் வேளாண் உற்பத்தி ஆணையர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ப.முருகேபூபதி, இந்திய தேசிய வேளாண் உயிரியல் ஆய்வு மைய இயக்குநர் ஆர்.ஜே.ரபீந்திரா மற்றும் பலர் பங்கேற்றனர்.

**கறவை மாடுகளில் நோய்த் தடுப்பு: ஒருநாள் இலவச பயிற்சி**

First Published : 09 Oct 2010 09:50:51 AM IST

நாமக்கல், அக். 8: கறவை மாடுகளில் நோய்த் தடுப்பு முறைகள் குறித்து ஒரு நாள் இலவசப் பயிற்சி வகுப்பு நாமக்கல்லில் நடைபெறுகிறது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வரும் 14-ம் தேதி இதற்கான பயிற்சி வகுப்பு நடைபெறும்.

இப் பயிற்சியில், கறவை மாடு இனங்களை தேர்ந்தெடுத்தல், கிடாரிக் கன்றுகள் பராமரித்தல், மாடுகளைத் தாக்கும் நோய்கள், நோய்களுக்குத் தடுப்பூசி, நோய் மேலாண்மை குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் வேளாண்மை அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ, 04286-266345, 266244 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டோ தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம் என நிலையத் தலைவர் பா. மோகன் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**பயறு சாகுபடியை அதிகரிக்க மானிய விலையில் விதை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2010,03:02 IST

மோகனூர்: "பயறு வகை பயிர்கள் சாகுபடி பரப்பளவை அதிகரிக்க, மானிய விலையில் சான்று பெற்ற விதை ரகங்கள் விற்பனை செய்யப்படுகிறது' என, மோகனூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்ராஜூ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: மோகனூர் வட்டாரத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. ஆண்டு தோறும் மோகனூர் வட்டாரத்தில் 800 ஹெக்டேர் பரப்பில் பயறு வகை பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்படும். பயறு வகை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் சிறப்பு அதிரடி திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டு 1,250 ஹெக்டேர் பரப்பில் பயறு வகை பயிர்கள் சாகுபடியை அதிகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.இப்பகுதியில் துவரை, உளுந்து, பாசிப்பயறு போன்ற பயறு வகைகள், வாழை, கரும்பு, நிலக்கடலை, சோளம், மரவள்ளி ஆகிய பயிர்களில் ஊடுபயிராக சாகுபடி செய்யப்படும். அதனால், குறைந்த மகசூல் மட்டுமே கிடைக்கிறது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ், துவரை செயல் விளக்கம் மற்றும் உளுந்து, பாசிப்பயறு ஆகிய பயிர்கள் சாகுபடி செய்ய சான்று பெற்ற விதைகளான பாசிப்பயறு (கோ 6) மற்றும் உளுந்து (வம்பன் 3, டி.எம்.வி., 1) ஆகிய ரகங்கள் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைத்து மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது.விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தனிப்பயிராக பயறு வகை பயிர்களை பயிரிட்டு கூடுதல் மகசூல் பெறலாம். மேலும், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் வயல் வரப்புகளில் உளுந்து பயிர் சாகுபடி செய்து 65 நாட்களில் கூடுதல் வருமானம் பெறலாம்.

**ராஜராஜன் 1,000 நெல் சாகுபடிக்கு வயல்வெளி கூட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,04:11 IST

நாமக்கல்: கொண்டிசெட்டிப்பட்டி கிராமத்தில் வரும் 11ம் தேதி ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி முறை குறித்த வயல்வெளி செயல்விளக்கக் கூட்டம் நடக்கிறது.

நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா வெளியிட்ட அறிக்கை: தஞ்சை பெரிய கோவில் ஆயிரமாவது ஆண்டு விழாவில், செம்மை நெல் "ராஜராஜன் 1,000' என்று அழைக்கப்படும் என முதல்வர் கருணாநிதி அறிவித்தார். அந்த நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை விவசாயிகள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில், நாமக்கல் வட்டாரத்தில் கொண்டிசெட்டிப்பட்டி கிராமத்தில் வரும் 11ம் தேதி வயல்வெளி செயல்விளக்கக் கூட்டம் நடக்கிறது.கூட்டத்தில் அனைத்து விவசாயிகளும் பங்கேற்று, ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி முறையை அறிந்து பயன்பெறலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கிருஷ்ணகிரியில் தொடர் மழை நிலக்கடலை விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,04:06 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பரவலாக மழை பெய்து வருவதால் கே.ஆர்.பி., அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. தொடர் மழையினால் மானாவாரியில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். வங்க கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு காரணமாக தமிழகத்தில் பல்வேறு இடங்களில் கன மழை பெய்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக இரவில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது.

நேற்று காலை நிலவரபடி மாவட்டத்தில் அதிகப்படியாக ஓசூரில் 43 மி.மீ., மழை பதிவானது. தளி 37, கிருஷ்ணகிரி 28.20, பெனுகொண்டாபுரம் 24.20, போச்சம்பள்ளி 18, ராயக்கோட்டை 12.5, நெடுங்கல் 11, பாரூர் 9.8, தேன்கனிக்கோட்டை 8 மி.மீ., மழை பதிவானது.தொடர் மழையால் மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரமாக உள்ள கே.ஆர்.பி., அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. அணையின் மொத்த நீர்மட்டமான 52 அடியில் கடந்த ஐந்து நாட்களுக்கு முன் 46 அடி நீர் இருந்தது. தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்து தற்போது நீர்மட்டம் 48.5 அடியாக உயர்ந்துள்ளது.நேற்று காலை நிலவரபடி அணைக்கு வினாடிக்கு 219 கன அடிநீர் வந்து கொண்டுள்ளது. அணையில்

இருந்து பாசனத்துக்காக இடது மற்றும் வலது புற கால்வாய்களில் விநாடிக்கு 219 கன அடிநீர் திறந்து விடப்பட்டுள்ளது.

"வரும் நாட்களில் நீர்பிடிப்பு பகுதியில் கன மழை பெய்து அணைக்கு நீர் வரத்து அதிகரித்து அணையின் நீர்மட்டம் 50 அடியை தொட்டதும் உபரி நீர் ஆற்றில் திறந்துவிடப்படும். அணைக்கு வரும் நீர் வரத்தை 24 மணி நேரம் கண்காணிக்கப்பட்டு வருகிறது' என, அணை உதவி செயற்பொறியாளர் கவுதமன் தெரிவித்தார்.இதனிடையே வானம் பார்த்த பூமியாக உள்ள போச்சம்பள்ளி மற்றும் பெனுகொண்டாபுரம் பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளதால் மானாவாரியாக நிலங்களில் பயறு வகை பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்து பயிர்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நிலக்கடலையில் மகசூல் எடுக்கும் நிலையில் பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி நகரில் தொடர்ந்து 3 நாட்களாக இரவில் நல்ல மழை பெய்வதால் நகரை சுற்றியுள்ள ஏரிகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. குறிப்பாக தேவசமுத்திரம் ஏரி, கட்டிகானப்பள்ளி ஏரி, அவதானப்பட்டி ஏரி ஆகிய ஏரிகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், ஏரி பாசனம் மூலம் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்சியடைந்துள்ளனர்.

**நன்மை செய்யும் பூச்சிகள் அமெரிக்காவில் இருந்து தருவிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,00:15 IST

கோவை: ""பப்பாளி, மரவள்ளியை தாக்கும் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த, அமெரிக்காவில் இருந்து மூன்று வகையான நன்மை செய்யும் பூச்சிகள் தருவிக்கப்பட்டுள்ளன," என்று தமிழக வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்தார். பப்பாளியை தாக்கும் மாவுப் பூச்சிகளை ஒட்டுண்ணிகள் மூலம் அழிக்கும் திட்டம், கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. தமிழக வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துவக்கி வைத்தார். இதன் பின் நிருபர்களிடம் அமைச்சர் கூறியதாவது: தமிழக உணவு உற்பத்தியில் பூச்சி மற்றும் நோய்களால் ஏற்படும் இழப்பு 20 சதவீதம். ஐந்தில் ஒரு பங்கு உணவு உற்பத்தி இழப்பு, பூச்சி, நோய்களால் ஏற் படுகிறது. இந்தியாவில் பூச்சி,நோய்களால் ஏற்படும் உணவு தானிய இழப்பு 50 ஆயிரம் கோடி ரூபாய். பூச்சிக்கொல்லி மருந்துகள், உணவு பயிர்களில் தங்கி விடுவதால் பின்விளைவுகள் ஏற்படுகின்றன. ரசாயன பூச்சி கொல்லி மருந்துகளை பயன்படுத்துவது குறைக்கப்பட வேண்டும்

என்ற நோக்கத்தில், விவசாயிகளுக்கு உழவியல் முறை, உயிரியல் முறை, தாவர பூச்சிக்கொல்லிகள் முறை ஆகிய பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த இரு ஆண்டுகளாக தமிழக விவசாயிகளை பப்பாளி மாவுப்பூச்சி கவலை கொள்ள செய்து வருகிறது. இதன் தாக்குதல் அதிகரிக்க, வெப்பமான சூழலும், குறைந்த மழை அளவுமே காரணம். 2009-2010ல் கோவை, திருப்பூர், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில், 7,027 எக்டர் நிலப்பரப்பில் பயிரான மரவள்ளிக்கு மாவுப்பூச்சியால் பாதிப்பு ஏற்பட்டது. இதை கட்டுப்படுத்த, ஒரு கோடி ரூபாய் செலவில் தாவர பூச்சிக்கொல்லி மற்றும் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகள் 100 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டன. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த பூச்சி மருந்துகளால், மாவுப்பூச்சியை ஓரளவு மட்டுமே கட்டுப்படுத்த முடிந்தது. 2010-2011ம் ஆண்டும் நாமக்கல், திருச்சி, கரூர் மாவட்டங்களில் 4,150 எக்டர் நிலப்பரப்பில் மரவள்ளியின் மீது மாவுப்பூச்சி தாக்குதல் காணப்பட்டுள்ளது. 75 லட்சம் ரூபாய் செலவில் பூச்சிகொல்லி மருந்து தெளிக்க விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்பட்டுள்ளது. மாவுப்பூச்சியை நிரந்தரமாக கட்டுப்படுத்த ஆய்வு செய்த கோவை வேளாண் பல்கலை, உயிரியல் பயிர் பாதுகாப்பு முறையே சிறந்த தீர்வு என கண்டறிந்துள்ளது. இப்பூச்சிகளை அழிக்க "அசிரோபேகஸ் பப்பாயி, சுடோலப்போடோமாஸ்டிக்ஸ் மெக்சிகானா, அனகைரஸ் லோக்கி' ஆகிய மூன்று நன்மை செய்யும் பூச்சிகள் அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன. கோவை வேளாண் பல்கலையில் இப்பூச்சிகளின் ஒட்டுண்ணிகள் இனப்பெருக்கம் செய்யப்பட்டு, தோட்டக்கலை துறை வாயிலாக விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும். ஒட்டுண்ணிகளால் நன்மை தரும் பூச்சிகளுக்கு பாதிப்பு வராது. குளவி இனத்தை சேர்ந்த 100 ஒட்டுண்ணிகள் மூலம், மூன்று மாதங்களில் ஐந்து லட்சம் ஒட்டுண்ணிகள் வரை இனப்பெருக்கம் செய்ய முடியும். இவை, பெருமளவில் பரவும் ஆற்றல் கொண்டவை. ஒரு கிராமத்துக்கு 100 ஒட்டுண்ணி வழங்குவதன் மூலம், மாவுப்பூச்சிகளின் தாக்குதலை சுலபமாகவும், எளிய முறையிலும் அழிக்கலாம். மாவுப்பூச்சிகள் முழுவதும் அழிந்து விட்டால், உணவு கிடைக்காமல் ஒட்டுண்ணிகளும் அழிந்து விடும். மூன்று வகை ஒட்டுண்ணிகளை பெருக்க 60 லட்சம் ரூபாய் மதிப்பில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகளை பயன்படுத்தும் விவசாயிகள், ரசாயன மருந்து தெளிக்கக் கூடாது. ரசாயன மருந்து தெளிப்பதால் ஒட்டுண்ணிகள் அழிந்து, மாவுப்பூச்சி பெருகி விடும். மாவுப் பூச்சிகளால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் இழப்பீடு கோரி விண்ணப்பித்தால் பரிசீலிக்கப்படும். இவ்வாறு, அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் கூறினார். பெங்களூரு வேளாண் விஞ்ஞானி ரபீந்திரா பேசுகையில், ""சில ஆண்டுகளுக்கு முன் கரும்பு பயிரை வெள்ளை அசுவிணி நோய் தாக்கியபோது, ஒட்டுண்ணிகளை பயன்படுத்தி கட்டுப்படுத்தினோம். தற்போது தோன்றியுள்ள மாவுப்பூச்சி, திரிபுரா மாநிலம் வரை பரவியுள்ளது. 300 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இவற்றை அழிப்பதற்கான ஒட்டுண்ணிகளை விரைவில் அதிகளவில் பெருக்கவுள்ளோம்,'' என்றார்.

**கரும்பு விவசாயிக்கு வட்டியில்லா பயிர் கடன் : சர்க்கரை ஆலை தனி அலுவலர் தகவல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,21:42 IST

தாராபுரம் : "தாராபுரம் கோட்டம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு விவசாயிகளுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலம் வட்டியில்லா பயிர் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும்,' என, தனி அலுவலர் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனம் மூலம் பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் கரும்பு நடவு செய்துள்ளனர். சில விவசாயிகள் தாங்களே கரும்பு ஆலைகள் அமைத்து காய்ச்சி வெல்லம் தயாரித்து விற்பனை செய்கின்றனர். இதற்காக, வெல்லம் மண்டி ஏஜன்டுகள் விவசாயிகளுக்கு முன்பணம் கொடுத்து அடிமாட்டு விலைக்கு வெல்லத்தை வாங்குகின்றனர்.

வெளிமார்க்கெட்டில் வெல்லத்துக்கு நல்ல விலை கிடைத்தும் விற்பனை செய்ய முடியாமல் அப்பாவி விவசாயிகள் தவிக்கின்றனர். தாராபுரம், மூலனூர், குண்டடம் ஒன்றியத்துக்கு உட்பட்ட விவசாயிகளின் நலன் கருதி, தாராபுரத்தை தலைமையிடமாக கொண்டு கோட்ட அலுவலகம் துவங்கப்பட்டுள்ளது.

இந்தாண்டு 640 ஏக்கர் விவசாய விளை நிலங்களில் கரும்பு நடவு செய்ய குறியீடு நிர்ணயக்கப்பட்டுள்ளது. இதுவரை 405 ஏக்கரில் கரும்பு பயிரிட விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். விவசாயிகளின் நலன் கருதி, உரம், பூச்சிக்கொல்லி மருந்து, நடவு கூலி, களைக்கொள்ளி உட்பட பல்வேறு செலவினங்களை கருத்தில் கொண்டு தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் வட்டியில்லா பயிர் கடனாக, நடவு கரும்புக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம், கட்டை கரும்புக்கு ரூ.24 ஆயிரம் ஏற்பாடு செய்யப்படும்.

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் வாடிக்கையாளர்களாக பதிவு செய்துள்ள விவசாயிகளின் தோட்டங்களுக்கே ஆலையின் களப்பணியாளர்கள் சென்று கரும்பில் ஏற்படும் நோய், கரும்பு பராமரிப்பு முறை, உர வகை, கரும்பு வளர்ச்சிக்கு தேவையான ஊக்கிகள் குறித்து விளக்கம் கொடுக்கின்றனர்.

கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு அரசின் விலையான ரூ.2,000 வழங்கப்படுகிறது. ஆலையின் மூலமாகவே கரும்பு வெட்ட கூலி ஆட்கள், ஆலைக்கு எடுத்துச்செல்ல லாரி ஏற்பாடு செய்து தருகிறோம். கரும்பு ஆலைக்கு எடுத்துச்சென்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் விவசாயிகளுக்கு பணம் கொடுக்கப்படுகிறது. அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்யாத விவசாயிகள், தங்களுடைய விவரங்களை பதிவு செய்து உறுப்பினராக வேண்டும். மேலும் விபரங்களுக்கு, 99429 - 08631, 99429 - 08643, 99429 - 08656, 97866 - 88200 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**பி.ஏ.பி., பாசனத்தில் முறைகேடு; கூடுதல் கட்டுப்பாடு தேவை : விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,21:39 IST

திருப்பூர் : "பி.ஏ.பி., பாசன நீரை பயன்படுத்துவதில் முறைகேடுகள் நடக்கின்றன. அரசு அதிகாரிகள் துணை போகாமல், அனுமதி சான்று வழங்குவதில் கூடுதல் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும்,' என, விவசாயிகள் வலியுறுத்தினர்.

விவசாயிகள் குறைகேட்பு கூட்டம், திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது; கலெக்டர் சமயமூர்த்தி தலைமை வகித்தார். கூட்டத்தில், இயற்கை முறை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில், மண்புழு உரம் தயாரிக்கும் விவசாயிகளுக்கு அதிக ஊக்கம் அளிக்க வேண்டும்; தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மனு கொடுத்தனர்.

விவசாயிகள் அளித்த மனு விவரம்: திருப்பூர் மாவட்ட தமிழக விவசாயிகள் சங்க செயலாளர் மனோகரன்: கொங்கு மண்டலத்தில், தென்னை சாகுபடியை நம்பியே, 80 சதவீத விவசாயிகள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். நீண்ட நாட்களுக்கு பிறகு, தேங்காய்க்கு விலை கிடைக்க துவங்கியுள்ளது. தேங்காய் மற்றும் தென்னை பொருட்கள் மூலமாக விவசாயிகளை காட்டிலும், இடைத்தரகர்களே பயன்பெறுகின்றனர். தென்னை வியாபாரிகளை காப்பாற்றும் வகையில், அரசின் கொப்பரை கொள்முதல் விலையை 44.50 ரூபாயில் இருந்து 60 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும்.

பி.ஏ.பி., பாசன திட்டத்தில், குறைந்த இடத்தை வைத்துக்கொண்டு, தூரத்தில் உள்ள தங்களது நிலங்களுக்கு தண்ணீரை எடுத்துச் செல்கின்றனர். அரசு அதிகாரிகள் சிலரும் உடந்தையாக உள்ளனர். எனவே, அனுமதி சான்று வழங்குவதில் கூடுதல் கட்டுப்பாடு விதிக்க வேண்டும். ஆழ்குழாய் கிணறு மானியம் பெறுவது குறித்தும் அதிகாரிகள் விவரிக்க வேண்டும்.

கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க தலைவர் பழனிச்சாமி: குறைந்த மழை அளவை கொண்ட திருப்பூர் மாவட்டத்தில், சொட்டு நீர் பாசனம் அமைப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். அரசு அறிவித்துள்ளபடி, 65 சதவீத மானியம் கிடைப்பதில்லை. 20 சதவீதத்திற்கும் குறைவான தொகை மட்டுமே கிடைக்கிறது. எனவே, புதிய விலை விகித அடிப்படையில் மானிய தொகை நிர்ணயம் செய்ய வேண்டும்.

கூட்டுறவு வங்கிகளில், நகைக்கடன் வழங்குவதுபோல், பயிர்க்கடன் வழங்கப்படுவதில்லை. இதனால், விவசாயிகள் வேறிடத்தில் கடன்பட்டு தத்தளிக்கின்றனர். அவசரத்துக்கு நகைக்கடன் பெறலாம் என்றாலும், ஒரு லட்சம் ரூபாய்க்கு மூன்றாயிரம் ரூபாய் காப்பீடு தொகை வசூலிக்கப்படுகிறது. எளிய வகையில் பயிர்கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

திருப்பூர் உழவர் சந்தையை சேர்ந்த சுப்ரமணியம்: தென்னை மரத்திற்கு ஆண்டுக்கு இரண்டு கிலோ நுண்ணூட்டச்சத்து உரம் வைக்க வேண்டுமென அதிகாரிகள் கூறுகின்றனர். செலவு அதிகமாவதால், தென்னை விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் நுண்ணுயிர் உரம் வழங்க வேண்டும்.

வே.வாவிபாளையம் ஊராட்சி தலைவர் பார்த்தசாரதி: ஆடு வளர்ப்போர் நல வாரியத்தில் உறுப்பினராக, ஐந்து ஆடுகளுக்கு மேல் வைத்திருக்க வேண்டும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதனால், குறைந்த ஆடுகளை வைத்துள்ளவர்கள் உறுப்பினராக முடியவில்லை. எனவே, நேரடி ஆய்வு நடத்தி, உண்மையான ஆடு வளர்க்கும் அனைவரையும் வாரியத்தில் இணைக்க வேண்டும்.

வடமலைபாளையத்தில் இருந்து வாவிபாளையம் செல்லும் மண் சாலை, எம்.எல்.ஏ., நிதியில் தார்ரோடாக மாற்றப்படுகிறது. இதனால், கனரக வாகனங்கள் சென்றுவரும். வழியில் உள்ள பி.ஏ.பி., வாய்க்கால் பாலம் மிகவும் பழுதடைந்துள்ளது. விவசாயிகளின் போக்குவரத்தை கருத்தில்கொண்டு, பாலத்தை புதுப்பிக்க வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் தங்களது குறைகளை மனுக்கள் மூலமாக தெரிவித்தனர்.

டி.ஆர்.ஓ., கஜலட்சுமி, கூட்டுறவுத்துறை இணை பதிவாளர் ராமமூர்த்தி, வேளாண் துறை இணை இயக்குனர் முத்துச்சாமி உட்பட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**பயிர்களுக்கு வானிலை சார்ந்த காப்பீடு : செயல்பாட்டுக்கு வந்தாச்சு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,21:36 IST

திருப்பூர் : வானிலை சார்ந்த பயிர் காப்பீடு திட்டம், திருப்பூர் மாவட்டத்தில் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

விவசாய பயிர்களுக்கு வானிலை சார்ந்த காப்பீடு திட்டம் மற்றும் தேசிய வேளாண் காப்பீடு திட்டம் நடைமுறையில் உள்ளது. கோவை மாவட்டத்தில் வானிலை சார்ந்த காப்பீடு திட்டம், ஈரோடு மாவட்டத்தில் தேசிய வேளாண் காப்பீடு திட்டம் உள்ளது. புதிதாக உருவான திருப்பூர் மாவட்டத்தில், கோவையில் இருந்து பிரிந்த ஏழு வட்டம் மற்றும் ஈரோட்டில் இருந்து பிரிக்கப்பட்ட ஆறு வட்டங்களில், அந்தந்த மாவட்ட காப்பீடு திட்டம் செயல்பாட்டில் இருந்தது.

திருப்பூர் மாவட்டம் முழுவதும், கடந்த 1ம் தேதி முதல் வானிலை சார்ந்த பயிர் காப்பீடு திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இத்திட்டத்தில், நெல், தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் (நிலக்கடலை, சூரியகாந்தி, எள்), பருத்தி, தோட்டக்கலை பயிர்களில் தக்காளி, வெங்காயம், மிளகாய், வெண்டை, கத்திரி உள்ளிட்ட பயிர்களுக்கு காப்பீடு செய்யலாம்.

நெல்லுக்கு 8.55 சதவீதம் காப்பீடு தொகை செலுத்த வேண்டும். இதில், அரசு மானியம் 6.34 சதவீதம்; விவசாயி 2.21 சதவீத காப்பீடு செலுத்த வேண்டும். நெற்பயிரின் அளவே, தானியங்கள், பயறு வகை மற்றும் எண்ணெய் வித்து பயிர்களுக்கும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பருத்தி மற்றும் காய்கறி பயிர்களுக்கு 12.96 சதவீத காப்பீடு செய்ய வேண்டும். அரசு மானியம் 6.34 சதவீதம் தவிர, 6.62 சதவீத காப்பீடு கட்டணத்தை விவசாயி செலுத்த வேண்டும்.

வேளாண் துறை இணை இயக்குனர் முத்துசாமி கூறியதாவது: திருப்பூர் மாவட்டம் முழுவதும் வானிலை சார்ந்த பயிர் காப்பீடு திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள் ளது. வெள்ளம், பூச்சி தாக்குதல், வறட்சி உள்ளிட்ட காரணங்களால், மகசூலில் பாதிப்பு ஏற்பட்டால் மட்டும் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் இழப்பீடு கிடைக்கும்.

வானிலை சார்ந்த திட்டத்தில் மழை, காற்று, வெயில், ஈரப்பதம், வறட்சி என பயிர் பாதிப்படைந்தால், அதற்குரிய இழப்பீடு பெற்றுக்கொள்ள முடியும். பயிர் கடன் பெற்றுள்ள அனைத்து விவசாயிகளும் காப்பீடு திட்டத்தில் இடம் பெறுவர். பயிர் கடன் பெறாத விவசாயிகள், காப்பீடு செய்ய முன்வரலாம். அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகங்களை அணுகி பயன் பெறலாம், என்றார்.

**விவசாயப் பயிர்கள் சேதம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,21:12 IST

பந்தலூர் : பந்தலூர் அடுத்துள்ள முக்கட்டி சோலாடி கிராமத்துக்குள் நுழைந்த காட்டு யானைகள், விவசாயப் பயிர்களை சேதப்படுத்தின.

பிதர்காடு வனச்சரகத்துக்கு உட்பட்ட பெக்கி பகுதியில், சில நாட்களுக்கு முன் நுழைந்த காட்டு யானைகள், மக்களை அச்சப்பட வைத்தன. தகவலறிந்த வனத்துறையினர், வனப்பகுதிக்குள் விரட்டினர். நேற்று முன்தினம் இரவு, 3 யானைகள், முக்கட்டி அடுத்துள்ள சோலாடி கிராமத்துக்குள் நுழைந்து, வாழை, தென்னை மரங்களையும், மரியதாஸ் என்பவரின் வீட்டுக் கூரையையும் சேதப்படுத்தின. பாதிக்கப்பட்ட பகுதிகளை வனவர் செல்வராஜ், வனக்காவலர் சசி, வார்டு உறுப்பினர் ஞானசேகர், எச்.ஏ.டி.பி., சமுதாய ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி பார்வையிட்டனர்.

**டெல்டாவில் சம்பா சாகுபடிக்கு 2,600 டன் யூரியா உரம் வருகை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2010,03:05 IST

தஞ்சாவூர்: டெல்டா பகுதி சாம்பா பருவ தேவைக்காக 2,600 டன் யூரியா உரம் நேற்று அதிகாலை தஞ்சைக்கு ரயில் மூலம் வந்தது.ஆந்திரா மாநிலம் கிருஷ்ணாஜிபட்டிணத்தில் இருந்து இஃப்கோ மூலம் இரண்டாயிரத்து 600 டன் யூரியா உரம் ரயில் மூலம் நேற்று தஞ்சை வந்தது. 42 வேகன்களில் வந்த யூரியா 186 லாரிகள் மூலம் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.இப்பணியை

கூட்டுறவு இணைப்பதிவாளர் (உரங்கள்) சந்தானம் தலைமையில் மண்டல அலுவலர்கள் மணிமாறன், சேகர், மனோகரன், மாறன் ஆகியோர் கண்காணித்து, அந்தந்த பகுதிகளுக்கு அனுப்பி வைத்தனர்.

**ராஜராஜன் 1000 சாகுபடியில் அதிக லாபம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2010,03:05 IST

கும்பகோணம்: "கும்பகோணம் அடுத்த சாக்கோட்டை வேளாண் நிலையத்தில் குறைந்த இடுபொருள் செலவில் அதிக லாபம் பெற பழைய செம்மை நெல் சாகுபடி முறையை ராஜராஜன் 1000 என்ற சாகுபடி முறையாக விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும்' என சாக்கோட்டை உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் கோவிந்தன் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: இம்முறையில் நாற்றங்கால் தயாரிக்க மேடான வடிகால் வசதியுள்ள, 40 சதுர மீட்டர் (ஒரு சென்ட்) அளவுக்கு நீர் ஆதாரத்துக்கு அருகாமையில், 14 நாட்களில் நடவு செய்வதற்கு ஏற்றவாறு நாற்றுகளை தயார் செய்திட பாய்நாற்றங்கால் முறையை பயன்படுத்த வேண்டும்.இதற்கு 300 காஜ் கனமுள்ள பாலித்தீன் பேப்பரை பயன்படுத்தி ஒரு சென்ட் பரப்பில் பாலித்தீன் பேப்பரை விரித்து, அதன் மேல் வளமான மண், நன்கு மக்கிய தொழுஉரம் இவற்றை ஐந்து செ.மீ., உயரத்துக்கு பரப்பி ஒரு மீட்டர் நீளம், அரை மீட்டர் அகலம், ஐந்து செ.மீ., உயரம் கொண்ட விதைப்புச் சட்டத்தை நாற்றங்காலில் வைத்து விதைப்பு செய்ய வேண்டும். இதற்கு இரண்டு கிலோ முளைகட்டிய நெல்விதைகள் போதுமானது. விதைத்த ஐந்து நாட்கள் வரை பூவாளி மூலம் நீர் ஊற்றி, 14 நாட்கள் வரையிலும் நாற்றங்காலைச் சுற்றிலும் பாத்தி நன்கு நனையும் வரை நீர் கட்ட வேண்டும்.

நடவு நாற்றினை பாலித்தீன் பையுடன் நடவு வயலுக்கு எடுத்து சென்று நாற்றுகளை பிரித்து வரிசைக்கு வரிசை முக்கால் அடி, செடிக்கு செடி முக்கால் அடி இடைவெளியில் ஒற்றை நாற்றாக நடவு செய்ய வேண்டும். மேடுபள்ளமில்லாத நன்கு சமன் செய்த பிறகே நடவு செய்ய வேண்டும். பள்ளமான இடங்களில் நாற்றுகள் அழுகி கரைந்து போகும் வாய்ப்புள்ளது.நட்ட 10 நாட்களில் கோனோவிடர் மூலம் களையை அமுக்கி விட வேண்டும். நட்ட 20 நாள் ஒரு முறையும், தேவைப்பட்டால் நட்ட 30ம் நாள் ஒரு முறையும் கோனோவிடர் பயன்படுத்தி அமுக்கி விட

வேண்டும். கோனோவிடர் பயன்படுத்துவதால் நாற்றின் பக்க வேர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டு அதிக வேர்கள், தூர்கள் உருவாகும், களைகள் முற்றிலும் கட்டுப்படுத்தப்படும்.அளவுக்கு அதிகமான நீர் பாய்ச்ச தேவையில்லை. மூன்றரை செ.மீ., நீர் பாய்ச்ச வேண்டும். இதனால், நாற்றுக்கு நல்ல காற்றோட்டம் கிடைக்கும்.

மண் பரிசோதனை முடிவுகளின் படி ரசாயன உரமிட வேண்டும். பயிரின் தேவையறிந்து தேவையான சத்துகளை மட்டும் பயிருக்கு அளிக்கலாம். தஞ்சை மாவட்ட மண்ணில் மணிச்சத்து உள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மண் பரிசோதனை மூலம் இதனை உறுதி செய்து கொண்டு தேவையற்ற உரங்களை குறைத்து, மேலும், தழைச்சத்து உரமான யூரியாவை ஒரு தடவைக்கு 22 கிலோ என்ற அளவில் இட வேண்டும். பச்சை வண்ண அட்டை மூலம் கண்காணித்து உரமிடலாம். யூரியாவை குறைவான அளவு இட்டால் பூச்சி நோய் தாக்குதலும் கட்டுப்படுத்தப்படும்.இச்சாகுபடியின் மூலம் ஏக்கருக்கு இரண்டு கிலோ விதை போதுமானது. நாற்றங்கால் பராமரிப்பு, களை எடுக்கும் செலவு குறைகிறது. அதிக தூர்கள், அதிக கதிர்கள் உருவாகின்றன. நீர்பாசனம் 30 முதல் 40 சதவீதம் குறைக்கப்பட்டு மகசூல் இரட்டிப்பாகும் நிலை ஏற்படும்.

**விதை விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2010,04:23 IST

மதுரை:விதைச் சட்டப்படி நடந்து கொள்ளாத விற்பனையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.மதுரையில் பெரியாறு - வைகை பாசன பகுதிகளின் விவசாய சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதையடுத்து அனைத்து பகுதிகளிலும் சாகுபடி பணிகள் மும்முரம் அடைந்துள்ளன. இந்நிலையில் விதை விற்பனையாளர்கள் ஆய்வுக் கூட்டம் மற்றும் பயிற்சி மாவட்ட விதை ஆய்வு துணைஇயக்குனர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடந்தது. விதை விற்பனையாளர்கள் உரிமம் இன்றி விதைகளை விற்பனை செய்யக் கூடாது. தரமான சான்று பெற்ற முளைப்புத் திறன் உள்ள விதைகளை விற்க வேண்டும்.

விற்பனையாளர்கள் விற்கும்போது விவசாயிகளுக்கு ரசீது கண்டிப்பாக வழங்க வேண்டும். விற்பனை ரசீதில் விவசாயிகளின் கையெழுத்தையும் கட்டாயமாக பெற வேண்டும். முளைப்புத் திறன் குறைந்த அல்லது விதைக்க லாயக்கற்ற விதைகளை உற்பத்தியாளர்களுக்கே திரும்ப அனுப்பிவிட வேண்டும். இவ்விதிமுறைகளை கடைபிடிக்காத விற்பனையாளர்கள் மீது விதைச் சட்டப்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதில் விற்பனையாளர்களுக்கு சிறையோ, அபராதமோ, இரண்டுமோ அளிக்கப்படலாம்.இந்நிகழ்ச்சியில் விதை ஆய்வாளர்கள் சுப்புராஜ்,

மோகன்ராஜ், வளர்மதி பங்கேற்றனர். விற்பனையாளர்கள் மீதான சட்ட நடவடிக்கைகள், அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கங்களை தெரிவித்தனர்.

**தென்னை மரத்தை சேதப்படுத்தும்காண்டாமிருக வண்டு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 09,2010,04:22 IST

மதுரை:தென்னை மரத்தின் பாளையை காண்டாமிருக வண்டுகளும், தண்டுப் பகுதியை சிகப்பு கூன் வண்டுகளும் சேதப்படுத்தி மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது. இவ்வண்டுகளால் ஏற்படும் சேதங்களை கட்டுப்படுத்துவது குறித்து விநாயகபுரம் வேளாண்மை துணை இயக்குனர் காதிரி தெரிவித்துள்ளதாவது:காண்டாமிருக வண்டு தாக்கப்பட்ட தென்னை இலைகள் முக்கோண வடிவில் வெட்டியது போல் காணப்படும். துளைக்கப்பட்ட தண்டுப் பகுதியின் துவாரத்திலிருந்து, மரச்சக்கைகள் வெளியே தள்ளப்பட்டிருக்கும். இவ்வண்டுகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்த, எருக்குழியில் கார்பரில் தூள் இரண்டு கிராமில் ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும். இவ்வாறு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தெளித்தால் முட்டை மற்றும் கூட்டுப் புழுக்கள் அழியும்.

வேப்பங்கொட்டைத்தூளுடன் மணல் சமபங்கு கலந்து குருத்துப் பகுதியின் மேல் மூன்று மட்டை இடுக்குகளில் மரத்திற்கு 150 கிராம் இடுவதன் மூலமும், அந்து உருண்டைகளை மட்டைக்கு ஒன்று வீதம் வைப்பதன் மூலமும் அழிக்க முடியும்.ஒரு பாளையில் ஆமணக்கு, கொட்டைமுத்து புண்ணாக்கு ஒரு கிலோ இட்டு முக்கால் பாகம் தண்ணீர் நிரப்பி மூன்று நாட்கள் ஊறவைத்து தெளிக்க வேண்டும். மெட்டாரைசியம் என்னும் பூஞ்சாளத்தை உபயோகித்தும் வண்டுகளைக் கட்டுப்படுத்தலாம் என, தெரிவித்துள்ளார்.

**செம்மைநெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,21:03 IST

காரியாபட்டி:காரியாபட்டி பாப்பனம் கிராமத்தில் துணை விவசாய அலுவலர் பாலசுப்பிரமணியன், உதவி விவசாய அலுவலர்கள் மீனா, ரகுராமன் மேற்பார்வையில், "ராஜராஜன் 1000' செம்மைநெல் சாகுபடி முறை இரண்டு எக்டேர் பரப்பளவில் கையாளப்பட்டது.

சாகுபடியின் முழு விபரம் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. இந்த தொழில் நுட்பத்தில் கூடுதல் மகசூல் பெற வேண்டும் என விவசாய உதவி இயக்குனர் பாண்டிதுரை வலியுறுத்தினார்.

## *நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில்*

## *பத்து கோடி டன் நெல் உற்பத்தி இலக்கு எட்டப்பட வாய்ப்பில்லை*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) நெல் உற்பத்தி இலக்கு எட்டப்பட வாய்ப்பில்லை என மத்திய வேளாண் துறை அமைச்சகத்தின் செயலாளர் பி.கே.பாசு தெரிவித்தார்.*
*9.50 கோடி டன்*
*நடப்பு வேளாண் பருவத்தில், இந்தியாவில் நெல் விளைச்சல் 10 கோடி டன்னாக இருக்கும் என முன்பு மதிப்பிடப்பட்டிருந்து. தற்போது இது 9.50 கோடி டன்னாக குறையும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ரபி பருவத்தில் மகசூல் நன்கு இருந்தால்தான் இந்த இலக்கையும் எட்ட முடியும் என அவர் மேலும் கூறினார்.*
*முதல் முன்கூட்டிய மதிப்பீட்டின்படி, நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்) நெல் உற்பத்தி 8.04 கோடி டன்னாக இருக்கும். இது, நிர்ணயித்த இலக்கான 8.70 கோடி டன்னைக் காட்டிலும் குறைவாகும். நாட்டின் நெல் உற்பத்தி சென்ற ஆண்டின் இதே*

பருவத்தில் 7.59 கோடி டன்னாக இருந்தது. உத்தரபிரதேசத்தில் கனமழை, பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளில் வறட்சி போன்ற காரணங்களால் கரீஃப் பருவ உற்பத்தி இலக்கை எட்ட முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது.

ரபி பருவம்

ரபி பருவம் என்பது உத்தேசமாக அக்டோபர் இறுதியிலிருந்து மார்ச் வரையிலான காலமாகும். 2010–11 ரபி பருவத்தில் நெல் உற்பத்தி 1.45 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நம் நாட்டில் பிரதானமாக இரண்டு பருவங்களில் விவசாயிகள் பயிர்கள் சாகுபடியினை மேற்கொள்கின்றனர். வட மாநிலங்களில் இப்பருவங்கள் முறையே கரீஃப் மற்றும் ரபி என்று அழைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் இவை முறையே குறுவை மற்றும் சம்பா என்றழைக்கப்படுகின்றன. இந்தியாவின் மொத்த நெல் உற்பத்தியில் கரீஃப் பருவத்தின் பங்களிப்பு மட்டும் 85 சதவீதமாக உள்ளது. ரபி பருவத்தின் பங்களிப்பு 15 சதவீத அளவிற்கே உள்ளது. இப்பருவத்தில் கோதுமை சாகுபடியே மும்முரமாக நடைபெறுகிறது. கரீஃப் என்பது கோடை கால பயிர்கள் என்றும், ரபி என்பது குளிர்கால பயிர் என்றும் அழைக்கப்படுகின்றன.

தென்மேற்கு பருவமழை

குறுவை சாகுபடி தென்மேற்கு பருவமழையையும், சம்பா சாகுபடி வடகிழக்குப் பருவமழையையும் சார்ந்து நடைபெறுகின்றன. அதாவது குறுவை பருவம் பொதுவாக ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் நிறைவடைகிறது. குறுவை பருவத்திற்கான விதைப்பு பணிகள் ஜூன் மாதத்தின் இடைப்பகுதியில் தொடங்கி ஜூலை மாதத்தின் இடைப்பகுதியில் நிறைவடையும். செப்டம்பர் மாதத்தில், அதாவது வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக அறுவடை பணிகள் மேற்கொள்ளப்படும். சம்பா பருவத்தில் விதைப்பு பணிகள், வடகிழக்குப் பருவமழையையொட்டி மேற்கொள்ளப்படும். அறுவடை ஜனவரி மாதம் நடைபெறும்.

நம் நாட்டில் அரிசி மற்றும் கோதுமையே மிக பிரதான உணவு தானியங்களாகும். வட மாநிலங்களில் கோதுமையும், கிழக்கு மற்றும் தென் மாநிலங்களில் அரிசியும் மக்களின் பிரதான உணவாக உள்ளன. தென் மாநிலங்களில் ஆந்திரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை நெல் உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன. கரீஃப் பருவத்தில் பஞ்சாப், அரியானா மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களும் அதிக அளவில் நெல் உற்பத்தி செய்கின்றன.

நடப்பாண்டு கரீஃப் பருவத்தில் நெல் சாகுபடி பரப்பளவு 3.70 கோடி ஹெக்டேராக சரிவடைந்துள்ளது. இது, சென்ற ஆண்டில் 3.74 கோடி ஹெக்டேராக இருந்தது. எனினும், இப்பருவத்தில் ஒரு ஹெக்டேர் வாயிலான நெல் உற்பத்தி 2,177 கிலோவாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய ஆண்டின் இதே பருவத்தில் 2,025 கிலோவாக இருந்தது.

இந்தியா, சர்வதேச அளவில், நெல் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. நாட்டின் நெல் உற்பத்தி 9.50 கோடி டன்னாக குறையும் என்றாலும், சென்ற 2009–10 பருவத்தை காட்டிலும் (8.91 கோடி டன்) அதிகமாகவே இருக்கும். அதே சமயம், கடந்த 2008–09–ஆம் ஆண்டைக் காட்டிலும் (9.91 கோடி டன்) குறைவாக இருக்கும். கடும் வறட்சியால் சென்ற ஆண்டில் நெல் உற்பத்தி ஒரு கோடி டன் குறைந்து போனது.

வறட்சி

சென்ற ஆண்டில் தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் நாட்டின் பல பகுதிகள் வறட்சிக்கு இலக்காயின. இதனால், அதற்கு முந்தைய 32 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டது. எனினும் நடப்பு 2010–11 பருவத்தில் உணவு தானியங்கள், பருப்பு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் கரும்பு உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்கும் நிலை உருவாகி உள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் பருவமழை போதிய அளவு பெய்துள்ளது. இதனையடுத்து, நடப்பு பருவத்தில் வேளாண் உற்பத்தி நன்கு அதிகரிக்கும் என்று மத்திய உணவு மற்றும் வேளாண்

*துறை அமைச்சர் சரத்பவார் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*
*கடந்த 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில், உணவு தானியங்கள் உற்பத்தி 23.45 கோடி டன் என்ற அளவில் அமோகமாக இருந்தது. இது, சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் 7 சதவீதம் சரிவடைந்து 21.82 கோடி டன்னாக குறைந்தது. எனினும் நடப்பு ஆண்டு பருவங்களில் உற்பத்தி கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகரிக்கும் என அண்மைக் கால மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன.*
*மத்திய திட்டக்குழு*
*தற்போதைய வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில், நடப்பு நிதி ஆண்டில் விவசாய துறையின் வளர்ச்சி 5–6 சதவீத அளவிற்கு இருக்கும் என மத்திய திட்டக்குழு தெரிவித்துள்ளது. நடப்பு பதினோராவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–2012), நம் நாட்டில் வேளாண் துறை 3 முதல் 3.5 சதவீதம் வரை வளர்ச்சி அடையும் என்றும் மதிப்பீடு செய்துள்ளது. முன்னர், 4 சதவீத வளர்ச்சியை எட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.*

## கூடலூர் புதிய பஸ் நிலையம் அருகே

## ரூ.25 லட்சம் செலவில் உழவர் சந்தை அமைக்க அதிகாரிகள் ஆய்வு

*கூடலூர், அக்.9–*
*கூடலூர் புதிய பஸ் நிலை யம் அருகே ரூ.25 லட்சம் செலவில் உழவர் சந்தை அமைக்க வேளாண் துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தினர். விரைவில் பணிகள் தொடங்கப்படும் என உறுதி அளித்துள்ளனர்.*
*கூடலூரில் உழவர் சந்தை*
*நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி ஆகிய இடங்களில் தமிழக அரசின் திட்டமான உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. கூடலூரில் உழவர் சந்தை அமைக்க கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு அமைச்சர் ராமச்சந்திரன் மூலமாக உத்தரவிட்டது.*
*இதற்காக ஆர்.டி.ஓ. தலை மையிலான வருவாய் துறையினர் மற்றும் நகராட்சி நிர்வாகம் உழவர் சந்தை அமைக்க நிலங்கள் தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டன.ஆனால் தேர்வு செய்வதில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்ததால் உழவர் சந்தை அமைப்பதில் காலதாமதம் ஏற்பட்டது.*
*25 சென்ட் நிலம் தேர்வு*
*இதனிடையே கூடலூர் புதிய பஸ் நிலையம் அருகே ஊராட்சி ஒன்றிய கட்டிடங் களுடன் 25 சென்ட் நிலம் உள்ளது. தற்போது இந்த பகுதி பாழடைந்த நிலையில் காணப்படுகிறது. இதில் உழவர் சந்தை அமைக்க வருவாய் துறையினர் முடிவு செய்தனர். ஆனால் குறிப் பிட்ட நிலத்தை நகராட்சி நிர்வாகமும், ஊராட்சி ஒன்றி யமும் உரிமை கொண்டாடின. இதனால் உழவர் சந்தை அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டது.*
*பின்னர் மாவட்ட கலெக்டர் உத்தரவின் பேரில் வருவாய் துறையினர் ஆய்வு செய்ததில் குறிப்பிட்ட பகுதி நகராட்சி நிலம் எனவும் அதில் உள்ள கட்டிடங்கள் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தது என தெரிவிக்கப்பட்டது.*
*ரூ.25 லட்சம் செலவில் உழவர் சந்தை*
*இதையொட்டி தேசிய ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.25 லட்சம் செலவில் கூடலூரில் உழவர் சந்தை அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கான பணிகளை தொடங்குவதற்காக வேளாண் விற்பனை துணை இயக்குனர் முரளிதரன் தலைமையில் வேளாண் அலுவலர்*

ரமேஷ், வேளாண் விற்பனை வாரிய உதவி பொறியாளர் நிர்மலா, உதவி வேளாண் அலுவலர் லட்சுமணன் ஆகியோர் சம்பவ இடத்தை பார்வை யிட்டு ஆய்வு செய்தனர்.
பின்னர் பாழடைந்த நிலை யில் உள்ள ஊராட்சி ஒன்றிய கட்டிடங்களை இடித்து விட்டு நிலத்தை ஒப்படைத்தால் உடனடியாக பணிகள் தொடங்கப்படும் வேளாண் விற்பனை அதிகாரிகள் தெரி வித்தனர். அப்போது நகராட்சி பணியாளர் சாஜன், கவுன்சிலர் ஆன்டனி ஆகியோர் உடன் இருந்தனர்.

## மசினகுடி பகுதியில்

## மஞ்சள் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள்

மசினகுடி, அக்.9–
மசினகுடி பகுதியில் அதிகளவு விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்டு உள்ளனர்.
காய்கறிகள்
மசினகுடி மற்றும் அதனை சுற்றி உள்ள கிராமப்புறங் களில் மலை தோட்ட காய்கறி களான உருளைக் கிழங்கு, பீன்ஸ், முட்டைகோஸ், பீட் ரூட் என பல காய்கறிகள் பயிர் செய்யப் படுகிறது. சில சமயங்களில் மலை தோட்ட காய்கறிகளுக்கு விலை கிடைக்காததால் விவசாயிகள் நஷ்டம் அடைகிறார்கள்.
இதனால் சில விவசாயிகள் வாழை, மஞ்சள், இஞ்சி போன்ற பண பயிர் சாகுபடி யில் செய்ய ஈடுபட்டு உள்ள னர்.
மஞ்சள் சாகுபடி
குறிப்பாக மலர் சாகுபடி யுடன் பஜ்ஜி மிளகாய், குடை மிளகாய், சுக்னி என வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய காய்கறி வகை களையும் சாகுபடி செய்கின் றார்கள்.
இதில் தற்போது குறுகிய கால பயிர்களை விட 6 மாத கால பயிர்களையும், ஒரு வருட பயிர்களையும் சாகுபடி செய்ய தொடங்கி உள்ளார் கள்.
ஒரு வருட பயிராகவும், அதிக வருவாய் தரக்கூடியது மான மஞ்சள் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு உள்ள னர். இதில் மசினகுடி அருகே வாழைத்தோட்டத்தில் உள்ள விவசாயிகள் அதிகளவில் ஈடு பட்டு வருகிறார்கள். பல ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள இந்த மஞ்சள் வாழைத் தோட்டம் பகுதியில் நல்ல விளைச்சலை தருவதாலும், அதிக விலைக்கு விற்பனை யாவதாலும் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கின் றது.
ஆர்வம்
இங்கு அறுவடை செய்யப் படும் மஞ்சள் ஈரோடுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தற்போது ஏராளமான விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்ய ஆர்வம் காட்ட தொடங்கி உள்ளார்கள்.